FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318735

1. District மாவட்டம் திருச்சி — PS காவல்நிலையம் [illegible] — Year ஆண்டு 2025 — FIR No முத அ எண் 15 — Date நாள் 23/10/25

2. (i) Act சட்டம் Prevention of Corruption Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள் 7
(ii) Act சட்டம் — Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் — Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 15.10.25 — Date to நாள் வரை 18.10.25 — Time Period / நேர அளவு — Time from நேரம் முதல் 22.10.25 - மாலை 19.00 hrs — Time to நேரம் வரை 18.10 hrs - காலை 11.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.2025 — Time நேரம் 12.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் புகார் அளிக்கப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 5 kms வடமேற்கு

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருச்சிராப்பள்ளி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ரு. கோபிகிருஷ்ணன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோவிந்தராஜன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05/6/94 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Civil Engineer — (g) Address : முகவரி 12, [illegible] திருச்சிராப்பள்ளி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. அண்ணாதுரை, நேர்முக உதவியாளர் [Tahsildar]
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

அதிகாரி கிராமத்தில்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துகளின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) –

10 Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) : –
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள, பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

31/10/25

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

31/10/25

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் G. MANIKANDAN
Rank நிலை DSP. V2 Ae. No. எண் 1830

மாண்புமிகு மாவட்ட தலைமை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2025–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளராகிய நான், இன்று 23.10.2025 பணியில் இருந்த போது முற்பகல் 12.30 மணியளவில் தஞ்சாவூர், பாஸ்கரபுரம், எண்.12 என்ற முகவரியில் வசித்து வரும் கோவிந்தராஜன் மகன் திரு.கோபிகிருஷ்ணா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அனுமதி பெற்று அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை ரகசியமாக செய்து, புகார்மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் RDOவின் PA திரு.அண்ணாதுரை மற்றும் புகார்தாரர் திரு.கோபிகிருஷ்ணா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்து எதிரியின் கெட்ட நடத்தையை உறுதி செய்துகொண்டு, பின்னர் இன்று 23.10.2025 பிற்பகல் 15.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.15/2025 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் கோ.கோபிகிருஷ்ணா, த/பெ.கோவிந்தராஜன், எண்.12, பாஸ்கரபுரம், தஞ்சாவூர். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சட்டக்கல்லூரி அருகில், திருச்சிராப்பள்ளி. ஐயா, நான் தஞ்சாவூர், பாஸ்காபுரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் BE படித்துள்ளேன். நான் கட்டிடம் கட்டுதல் சம்பந்தமாக சிவில் வொர்க்ஸ் செய்து வருகிறேன். எனது பெரியப்பா மகன்கள் டாக்டர்.ராஜேஷ்குமார் மற்றும் திரு.கார்த்திகேயன் ஆவர். மேற்படி இருவரும் திருச்சியில் வசித்து வருகிறார்கள். திரு.கார்த்திகேயன் அவர்கள் கடந்த 1995 ஆம் வருடம் திருச்சி, கே.கே.நகரில் டவுன் சர்வே எண். 190க்கு கட்டுப்பட்ட 11070 சதுரடிகள் கொண்ட வணிக இடத்தை தனது பெயரில் வாங்கியிருந்தார். மேற்படி சொத்தை, கடந்த 2021 ஆம் வருடம் தானசெட்டில்மெண்ட் மூலமாக அவருடைய தம்பி டாக்டர்.ராஜேஷ்குமாருக்கு எழுதி கொடுத்துவிட்டார். டாக்டர்.ராஜேஷ்குமாருக்கு மேற்படி சொத்து கிடைக்கப்பெற்ற பின்பு, டவுன் சர்வே எண்.190–க்குரிய கம்ப்யூட்டர் SLR-ஐ பார்வையிட்டதில், அச்சொத்து திருச்சி மாநகராட்சி ஆணையர் பெயரில் இருப்பது தெரியவந்தது. அதனை தனது பெயருக்கு மாற்றம் செய்யும் பொருட்டு கடந்த 2022 ஆம் வருடம் மே மாதத்தில் டாக்டர்.ராஜேஷ்குமார் அவர்கள், திருச்சி, வருவாய் கோட்டாட்சியருக்கு விண்ணப்பம் கொடுத்திருந்தார். மேற்படி விண்ணப்பம் ஆர்.டி.ஓ. அலுவலகத்திலிருந்து நடவடிக்கைக்காக திருச்சி கிழக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. பின்னர், திருச்சி, கிழக்கு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து, திருச்சி மாநகராட்சி உதவி ஆணையர், வார்டு

குழு அலுவலகம்-4 மற்றும் கிழக்கு தாலுக்கா மண்டல துணை வட்டாட்சியருக்கும் அம்மனு மீது கருத்துரு கேட்டு அனுப்பியிருந்தார்கள். அதன்பேரில், திருச்சி மாநகராட்சி உதவி ஆணையர், வார்டு குழு அலுவலகம்-4 அலுவலகத்திலிருந்து கடந்த 23.09.2024-ல் பெயர் மாற்றம் செய்ய சம்மதம் தெரிவித்து கருத்துருவை வட்டாட்சியர் கிழக்கு அவர்களுக்கு அனுப்பியிருந்தார். எனது பெரியப்பா மகன் அண்ணன் டாக்டர்.ராஜேஷ்குமார் அவர்கள் மருத்துவராக இருப்பதால், பெயர் மாற்றம் மனு தொடர்பாக அரசு அலுவலகத்திற்கு அலைய முடியவில்லை என தெரிவித்து, மேற்படி வேலை தொடர்பாக ஆர்.டி.ஒ. அலுவலகத்திற்கு சென்று பெயர் மாற்றம் செய்யும் வேலையை என்னை செய்து முடிக்க சொல்லி, எனது பெயருக்கு ஒரு Authorization-னை கடந்த ஜூன்-2025ல் வழங்கினார். அதன்பேரில் நான், திருச்சி ஆர்.டி.ஒ. அலுவலத்திற்கு சென்று டாக்டர்.ராஜேஷ்குமார் அவர்கள் கொடுத்த பெயர் மாற்றம் மனு தொடர்பாக திருச்சி RDOவின், PA திரு.அண்ணாதுரை அவர்களை நேரில் பல முறை சந்தித்து கேட்டு வந்தேன். அவரும் செய்து தருவதாக கூறிவந்தார். நான், கடந்த 15.10.2025 அன்று மாலை 6.10 மணி சுமாருக்கு RDO திருச்சி அலுவலகம் சென்று RDOவின், PA திரு.அண்ணாதுரை அவர்களை நேரில் சந்தித்து மனு தொடர்பாக கேட்டபோது, PA திரு.அண்ணாதுரை அவர்கள் மாநகராட்சி அலுவலகத்திலிருந்தும், கிழக்கு வட்டாட்சியர் அலுவலத்திலிருந்தும் பதில் வாங்கிவிட்டேன், இனிமேல்தான் டாக்டர்.ராஜேஷ்குமார் சொத்திற்கான கம்ப்யூட்டர் SLR ல் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக, நான் பைல் தயார் செய்து, RDO அவர்களுக்கு அனுப்பி உத்தரவு பெற்று மாற்றம் செய்யவேண்டும். உங்க சொத்து மாநகராட்சி பகுதியில் இருப்பதால், பல கோடி மதிப்பு பெரும் என சொல்லி, மேற்படி சொத்து தொடர்பாக ஏற்கனவே பதில் அனைத்தும் வாங்கிட்டேன், இன்னும் நிறைய வேலை இருக்கு, டாக்டரும் சும்மா வந்துட்டு போறாரு, நீங்களும் சும்மா வந்து வேலை முடிஞ்சிருச்சா என கேட்டுவிட்டு போறீங்க, என்ன ஒன்னும் கவனிக்காம போறீங்க, என்ன தனியா கவனிச்சாதான் வேலை நடக்கும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், என்ன சார் கவனிக்கிறது என்று கேட்டேன், அதற்கு அவர் என்னிடம் Computer SLR ல் பெயர் மாற்றத்திற்கு பரிந்துரைத்து ஏற்பாடு செய்ய எனக்கு தனியா ரூபாய் 2,00,000 கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், கடந்த இரண்டு வருடமாக டாக்டரும், நானும் அலையிறோம் சார், பணம் இல்லாம செஞ்சிகொடுங்க சார் என்று கேட்டேன், அதற்கு PA அண்ணாதுரை அவர்கள் 2,00,000 ரூவா கொடுத்தீங்கனா உங்க வேலையை முடிச்சி உங்களுக்கு Computer SLR ல் பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வேன் என வற்புறுத்தினார், ஆனா பணம் கொடுக்கலைனா மேலும் இரண்டு வருடம் அலையவேண்டும், அப்போதும் உங்களுக்கு Computer SLR ல் பெயர் மாற்றம் ஆகாது என்று கறாராக சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் நான் அப்போதைக்கு அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

பிறகு நான் இரண்டு நாள் தீபாவளி வேலையாக இருந்தேன். கடந்த 18.10.2025 அன்று காலை 11 மணி சுமாருக்கு PA அண்ணாதுரை அவர்கள் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு, பணம் ரெடி பண்ணிட்டீங்களா என்று மீண்டும் பணம் கேட்டு வற்புறுத்தினார். அப்போது நான் அவரிடம், எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாவிட்டாலும், அப்போதைக்கு சரி சார், டாக்டர் அண்ணாவிடம் பேசிவிட்டு வர்றேன் என்று சொன்னேன். மீண்டும் நேற்று 22.10.2025 மாலை 7 மணி சுமாருக்கு PA அண்ணாதுரை அவர்கள் என்னை அவரது செல்போனிலிருந்து தொடர்பு கொண்டார். அப்போது நான் வேறு தொலைபேசி என்னுடன் பேசிக்கொண்டிருந்ததால், அவரது செல்போன் நெம்பர் Missed Call-ல் தெரிந்தது. பிறகு நான் PA அண்ணாதுரை அவர்களை எனது செல்போனிலிருந்து தொடர்பு கொண்டு பேசியபோது, PA அண்ணாதுரை அவர்கள் என்னிடம் பணம் ரெடி பண்ணிட்டீங்களா என்று கேட்டுவிட்டு, பணம் ரெடியானவுடன் போன் பேசிவிட்டு வரச்சொன்னார். இது தொடர்பாக எங்க அண்ணன் டாக்டர்.ராஜேஷ்குமார் அவர்களிடம் நடந்த விபரத்தை சொல்லி, PA அண்ணாதுரை அவர்கள் நமது வேலையை செஞ்சிகொடுக்க லஞ்சமாக ரூபாய் 2,00,000 கேட்கிறார் என்று தெரிவித்தேன். அதற்கு டாக்டர்.ராஜேஷ்குமார் அவர்கள் லஞ்சம் எதுவும் கொடுக்கவேண்டாம் என்று தெரிவித்து, சட்டப்படி லஞ்ச ஒழிப்பு துறைக்கு சென்று PA அண்ணாதுரை மீது புகார் அளித்து நடவடிக்கை எடு என்று கூறினார். என்னிடம் லஞ்சம் கேட்ட திருச்சி RDOவின் PA திரு.அண்ணாதுரை மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (G.Gopikrishna) 23/10/2025 Submitted to the Court of Hon'ble Principal District and Sessions Judge Tiruchirappalli. Received this report at 12.30 Hrs. on 23.10.2025 and made Confidential Enquiry and registered a case in Trichy V&AC Cr.No 15/2025 U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 15.00 Hrs. on 23.10.2025. Sd.xxx (G.MANIKANDAN) 23.10.2025 Dy. Supdt. of Police, V&AC Trichy.

(G MANIKANDAN)
23-10-25
Dy. Supdt of police.
V&Ac.
TRICHY.